**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**
**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 024/2023** **நாள்: 30.08.2023**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' - லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

இன்றைய அடைக்கல அன்னை சபை
மயிலையில் தடம்பதிக்க காரணமாக இருந்தது
ஆரோக்கிய அன்னைக்கு நம் முன்னோர் செய்த நவநாள்.
அந்த நவநாட்களை எதிர்நோக்கியிருக்கும் நாம்
இந்த நவநாட்களில் அன்னையை நோக்கி மன்றாடி
அவளின் ஆசீர்பெறுவோம்.

### ஆரோக்கியம் தருபவள் அன்னை:

இன்று பல்வேறு பிரச்சினைகளையும் சிக்கல்களையும்
நாம் எதிர்கொள்வதால்
உடலும் உள்ளமும் அதிகம் பாதிக்கப்படுகிறது.
குறைந்த வயதில் கூட
நாம் எதிர்பார்க்காத நோய்களால் பீடிக்கப்படுகிறோம்.
எனவே முன்எப்போதையும் விட
அன்னையின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கை வலுப்பெற வேண்டும்.
இந்த உலகம் முழுவதும் நிறைந்திருக்கும்
நலன்களின் ஆற்றலின் அடையாளமாய் அவள் இருக்கிறாள்.

உயிர் தரும் காற்றும் உரம் தரும் உணவும்
நலம் தரும் மருந்தும் ஆரோக்கியமான ஔடதங்களும்
எல்லாமே அவள் சாயலாக நின்று நமக்கு
வளமான வாழ்வை வழங்குகின்றன.

இந்த நம்பிக்கையை நம்மில் வளப்படுத்தி ஆரோக்கியம் பெறுவோம்.

## அடைக்கலம் தருபவளும் அன்னையே:

இன்றைய உலக நிகழ்வுகளில் பல சமயங்களில்
நாம் திக்குத் தெரியாத காட்டில்
தனித்து விடப்பட்டது போல் உணர்கிறோம்.
பல சமயங்களில் நமது நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள்,
எதிர்ப்பார்த்த இடங்கள் ஏமாற்றம் தருகின்றன.
இப்படிப்பட்ட சூழலை எதிர்கொள்ளும் போது
**நமக்கிருக்கும் ஒரே புகலிடம்**
**அன்னை தான் என்பதை உணர்வோம்.**
அவளின் அடைக்கலத்தில் நம்மை ஒப்படைப்பதே
அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு எனப் புரிந்துகொள்வோம்.
ஆரோக்கிய அன்னையின் அடைக்கத்தில் நம்மை ஒப்படைப்போம்.

## ஆசிக்கும் நன்மை அருள்பவள் நம் அன்னை:

பல நன்மைகள் நம் வாழ்விலும்
நம் அன்புக்குரியவர் வாழ்விலும்
நடக்க வேண்டுமென வெகுவாக ஆசிக்கிறோம், வேண்டுகிறோம்.
கிடைக்கவில்லையே எனக் கலங்குகிறோம்.
நம்பிக்கையோடு நம் அன்னையிடம் நம்மை ஒப்படைப்போம்.
ஆசிக்கும் நன்மைகள் அத்தனையும் நமக்கு அருள்வாள்.
நம்பிக்கையோடு அவள் பாதங்களைப் பற்றிக்கொள்வோம்.
நன்மைகள் நம்மைத் தேடிவரும்.

## அபரிமிதமாக நம்மை ஆசீர்வதிப்பவள் அன்னை:

ஒன்று கேட்டால் 100 கிடைக்கும் கற்பகத்தரு
நம் ஆரோக்கியத்தாய்.
அதனால் தான் அவளைத் தேடி
அத்தனை மக்களும் வருகிறார்கள்.
இல்லை என்பதற்கு இங்கு இடமேயில்லை.
அவள் பாதம் பணிந்தால் கோடி நன்மைகள் பெறுவோம்.
இன்னும் நமக்குத் தயக்கமேன்? அவளை அண்டிச் செல்ல.

கவலையா அன்னையிடம் செல்வோம்
கலக்கமா அவளிடம் அடைக்கலம் புகுவோம்
எதிர்ப்பா? ஏமாற்றமா? பிரச்சினைகளா?
பயமா? சந்தேகமா? தடுமாற்றமா?
எதுவானாலும் ஒரே மருந்து ஆரோக்கியத் தாய்.

அவளிடம் அபரிமிதமான நம்பிக்கை கொள்வோம். ஆசீர்பெறுவோம்.
இதெல்லாம் கேட்பதற்கும் சொல்வதற்கும் எளிதாக இருக்கிறது.
நடைமுறையில் அப்படி இல்லையே.
கேட்டுக் கேட்டு சோர்ந்து போயிருக்கிறோம் என்று
உங்களில் பலர் சொல்வது என் காதில் விழுகிறது.

## அன்புக்குரியவர்களே!

ஒன்று சொல்கிறேன் புரிந்துகொள்ளுங்கள்.
Switch போட்டால் பல்ப் எரிய வேண்டும் இதுதான் நியதி.
பல்ப் எரியவில்லை என்றால் Connection-ஐ சரிசெய்யுங்கள்.
பல்ப் சரியாக இருக்கிறதா? எனப் பாருங்கள்.
Switch loose contact–ஆ எனப் பரிசோதியுங்கள்.
ஏதோ ஒன்று இங்கு தான் குறைவாக இருக்கிறது, அங்கு இல்லை.

நம் வேண்டுதல் கிடைக்கவில்லை எனில்
நம்மிடம் சரிசெய்ய வேண்டிய
காரியங்கள் இருக்கின்றன எனப் புரிந்துகொண்டு
நம்மை நாம் சரிசெய்து கொள்வோம்.
இந்த சரிசெய்தல் துல்லியமாக இருக்க வேண்டும்.
இல்லை எனில் connection –க்கு வாய்ப்பில்லை.
நம்மைத் துல்லியமாக சரிசெய்வோம்.
இருவேறுபட்ட நிலை நம்மில் அன்னை செயல்படத் தடையாகும்.

நாம் நம்புவதாகச் சொல்கிறோம் சந்தேகம் எப்படி வருகிறது?
நாம் மகிழ்ச்சியாக இருப்பதாக மார்தட்டுகிறோமே
கவலையினால் ஏன் துவள்கிறோம்?
எதையும் எதிர்கொள்ளும் பேராற்றல் நமக்கு உண்டு என்றால்
சோர்வும் களைப்பும் நம்மை எப்படி அனுகும்?
**ஒளி இருக்கும் இடத்தில் இருளுக்கு என்ன வேலை?**
**புரிந்து கொண்டு நம் ஆழ்மனத்தைத் துல்லியமாக பயிற்றுவிப்போம்.**
அன்னையின் மீதுள்ள அன்பில் நம்மை உறுதிப்படுத்துவோம்.
**ஆரோக்கிய அன்னை நம்மை**
**அனைத்து நலன்களாலும் வளங்களாலும் நிரப்புவார்.**

**மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்திகள்:**

## மூன்று அருட்சகோதரிகளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது.

நமது இளம் சகோதரிகள் 4 பேரை NEET ஓராண்டு பயிற்சிக்காக தஞ்சை விளார் கல்லூரி இல்லத்தில் தங்கியிருக்கச் செய்தோம். இந்த 4 பேரில் 3 அருட்சகோதரிகள் 1. சகோ. அருள் அபிஷா (1487) 2. சகோ. மெஜில்லா சில்வேரியா மேரி (1490) 3. சகோ. பரலோக மேரி (1491) ஆகியோர் NEET தேர்வில் நல்மதிப்பெண்கள் பெற்று மூவரும் St. John's மருத்துவக் கல்லூரியில் இளங்கலை மருத்துவம் (MBBS) படிக்க இடம் கிடைத்து கல்லூரியில் சேர்ந்துவிட்டார்கள். ஒரு MBBS இடம் கிடைப்பதே பெரிய காரியம். ஆனால் ஒரே ஆண்டில் 3 சகோதரிகளுக்கு இடம் கிடைத்திருப்பது சகோதரிகளின் கடினஉழைப்பும், பக்குவமான திட்டமிடலும், வழிகாட்டுதலும் நம் உழைப்பை ஆசீர்வதித்த அடைக்கலத்தாயின் பெரும் கருணையும் ஆகும் என உணர்கிறோம். நெஞ்சம் நிறைந்து அடைக்கலத் தாய்க்கு நன்றி சொல்வோம்.

இப்பெரும் சாதனைக்கு உடனிருந்தவர்களுக்கு நன்றி சொல்வது நமது கடமை. இந்த 4 அருட்சகோதரிகளையும் சகோ. டெரன்சியா (854) அவர்களின் பொறுப்பில் ஒப்படைத்திருந்தோம். தொடர்ந்து இவர்களோடு வழிநடந்து, துல்லியமாகக் கண்காணித்து கவனச்சிதறல் சிறிது கூட இல்லாமல் கடிவாளமிட்டு இலக்கை அடையச்செய்த சகோதரி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம். மதிப்பெண் பெற்றால் போதாது போட்டி உலகில் இடம் கிடைக்க எங்கெல்லாம் விண்ணப்பிக்க வேண்டும் எப்படிப்பட்ட ஆவணங்கள் தேவை என இரவு பகலாக பலரைத் தொடர்பு கொண்டு விழிப்போடு Online—ஐ கண்காணித்து சிறு தவறுகூட இல்லாமல் Interview -க்கு தயார் செய்து வெற்றியோடு கட்டணத்தையும் கட்டி இடம் கிடைக்க விழிப்போடு பணியாற்றிய சகோ. ஜாய்ஸி ஜெனிபர் (1363) அவர்களுக்கும் நமது பாராட்டுக்களை உரித்தாக்குகிறோம்.

## Bon Secours IAS Academy தொடக்கம்:

போட்டி நிறைந்த உலகில் வாழ்கிறோம். போட்டி நமது இயல்பாக வேண்டும். நாம் வெற்றி பெற்றதனால் தான் மானுடப் பிறவி எடுத்தோம் என்பதுதான் அறிவியலின் கூற்று. அப்படியானால் ஆரோக்கியமான முன்னேறுதல் அவசியம். போட்டி என்பது அடுத்தவர் காலை வாரி கடந்து செல்லும் கயமையல்ல. நம் இலக்கை மட்டுமே கண்முன் கொண்டு மெய் வருத்தம் பாராமல், பசிநோக்காமல், கண்துஞ்சாமல் காரியத்தை நோக்கி மட்டுமே முன்னேறும் கடமை உணர்வு. இதுதான் மனிதர்களை சிகரம் தொடவைக்கிறது.

இப்படி சிகரத்தை நோக்கி நடக்க ஆவல்கொள்ளும் இளையோர் கிராமப்புறங்களிலும் வாழ்கிறார்கள். ஆனால் வாய்ப்புக்களின் கதவுகள் அவர்களுக்கு மூடப்பட்டுக் கிடக்கின்றன. இந்தக் கதவுகளைத் திறந்து புதிய பாதையை அமைத்துக் கொடுப்பவர்களை வரலாறு போற்றும். அந்த விதத்தில் நம் இளையோரை அரசுப்பணிகளுக்கும், ஆட்சிப்பணிகளுக்கும் தயார் செய்யும் இடமாக நம் கல்லூரிகளை மாற்ற வேண்டும் என்பது எம் நீண்ட நாள் கனவு. இந்தக் கனவு இன்று மெய்ப்பட்டிருக்கிறது.

இக்கனவை மெய்ப்படச் செய்தவர் நம் சகோ. விக்டோரியா அமலோற்பவம் (995) ஆவார். அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். மிகுந்த சிரத்தையோடு இக்காரியத்தை செய்திருக்கிறார்கள். ஆண்டவருக்கு நன்றி சொல்லி மீண்டும் நம் சகோதரியைப் பாராட்டுவோம். உடன் பயணித்த கல்லூரிச் செயலர் சகோ. அம்புரோஸ் மேரி (0693) - யை மனதார வாழ்த்துகிறோம்.

கனவுகள் மெய்ப்பட
நம் மனங்கள் இணைய வேண்டும்
கரங்கள் கோர்க்க வேண்டும்
சின்னச் சின்னச் சந்தோஷங்களை விட்டுவிட வேண்டும்
வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்க வேண்டும்
வந்த வாய்ப்பை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்
கவனச்சிதறல்களைக் கடந்துவிட வேண்டும்
வரும் சவால்களை சந்திக்க வேண்டும்
முன்னோக்கியே எப்போதும் பார்க்க வேண்டும்
முழு மூச்சாய் அதற்காக உழைக்க வேண்டும்
இவை எதிலாவது கோட்டைவிட்டால் கோட்டை நம் கைநழுவிப் போய்விடும்.
அன்புக்குரியவர்களே கடவுளின் அற்புதப்படைப்பாகிய நாம் கடவுளின் கனவு மெய்ப்பட வாழ்வோம்.

## அடைக்கலா உயர் கல்வி உதவித்தொகை:

இந்த ஆண்டு அடைக்கலா உயர் கல்வி உதவித்தொகைக்கான கைப்பிரதியும் தகவல் அடங்கிய கடுதாசியும் இத்துடன் அனுப்பப்படுகிறது. ஏற்கெனவே முடிவு செய்தது போல இந்த ஆண்டு உயர்க்கல்விக்கான உதவித்தொகை தமிழகத்தில் 150 பேருக்கும் மணிப்பூரில் 150 பேருக்கும் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் மிகத் தேவையானவர்களுக்கு மட்டுமே பரிந்துரைக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன். செப்டம்பர் 01 முதல் 10 தேதி வரை விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம். கடுதாசியைப் படித்துச் செயல்படுங்கள்.

**சபைத் தலைமை அன்னையின் செப்டம்பர் மாதப் பணித்திட்டம்**

| | | |
|---|---|---|
| 01 | - | General Council Meet – Generalate |
| 02 | - | Enlarged Council Meet - Generalate |
| 03 – 05 | - | Office Work – Generalate |
| 06 | - | Personal Prayer day |
| 07 – 08 | - | Office Work – Generalate |
| 09 | - | Travel to Dindigul |
| 10 | - | Dindigul Our Lady – Alumni Meeting |
| 11 | - | Dindigul Cottage Sisters Meeting |
| 12 | - | TNCRI – Visiting CRI Land Trichy. |
| 13 | - | TNCRI – Executing Meeting |
| 14 | - | Travel to Chennai |
| 15 | - | Preparation for Human Chain Rally for Peace in Manipur |
| 16 | - | Human Chain Peace Rally – Santhome Mylapore |
| 17 – 20 | - | AFFI 3rd Order Meeting Coimbatore & Trichy Karumandapam |
| 22 – 25 | - | National CRI Meeting – Bangalore |
| 26 – 29 | - | Document Preparation - Generalate |
| 30 | - | Archives Meet – Vilar College – Design Final Approval |

**உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆரோக்கிய அன்னையின்**
**ஆசீரும் அருளும் நிறைவாகக் கிடைக்க**
**நெஞ்சார்ந்து வாழ்த்துகிறேன். அன்போடு செபிக்கிறேன்.**

**பிரபஞ்சப் பேரன்பில்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**